# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 755/7—1993 පෙබරවාරි 24 වැනි බදාදා—1993.02.24

755/7 ஆம் இலக்கம் – 1993 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.—பி.21/78 III

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின்கீழ் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.

திருமதி சீ. எஸ். கருணாரத்ன,<br>
செயலாளர்,<br>
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,<br>
1993, பெப்புருவரி 15.

### கட்டளைச்சட்டம்

1. இக் கட்டளைச்சட்டம் பட்ட வகுப்புக்கு மேற்பட்ட மருத்துவக்கல்வி நிறுவக (திருத்த) கட்டளைச்சட்டமென எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 1993 மாச்சு மாதம் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்.

2. 1990 திசெம்பர் 27ஆந் தேதிய 642/9ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டு 1990ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க பட்ட வகுப்புக்கு மேற்பட்ட மருத்துவக்கல்வி நிறுவக (திருத்த) கட்டளைச்சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டதான, 1980 எப்பிரல் 10ஆம் தேதிய 83/7ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட 1980ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பட்ட வகுப்புக்கு மேற்பட்ட மருத்துவக்கல்வி நிறுவகக் கட்டளைச்சட்டம் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அதன் 10ஆம் பந்தியின் :—

(அ) அப்பந்தியின் (1)ஆம் உட்பந்தியின் (எ) எனும் வாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வாசகத்தை இடுவதன் மூலமும் :—

"(எ) நிறுவகத்தின் உடனடிக் கடந்த காலப் பணிப்பாளர் :—

(ஆ) அப்பந்தியின் (1)ஆம் உட்பந்தியில் (ஒ), (ஓ), (ஔ), (க) மற்றும் (ங) என்னும் வாசகங்களை நீக்கி விட்டு அவற்றிற்குப் பதிலாக பின்வரும் வாசகங்களை இடுவதன் மூலமும் :—

"(ஒ) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டவையான பல்கலைக்கழகங்களின் சகல மருத்துவ பீடங்களினதும் துறைத்தலைவர்கள் ;

(ஓ) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டவையான பல்கலைக்கழகங்களின் சகல பல் வைத்திய பீடங்களினதும் துறைத் தலைவர்கள்."

(இ) அப்பந்தியின் (2)ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும் :—

"(2) (அ) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டவையான பல்கலைக்கழகங்களின் ஒவ்வொரு மருத்துவ பீடங்களிலிருந்தும், அத்தகைய ஒவ்வொரு பீடத்தினதும் துறைத் தலைவர்களிடையேயிருந்து, அத்தகைய பீடங்களின் ஒவ்வொரு பீடச் சபையினாலும் தெரிவு செய்யப்படும் ஒவ்வோர் உறுப்பினர் ;

(ஆ) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டவையான பல்கலைக்கழகங்களின் ஒவ்வொரு பல் வைத்திய பீடங்களிலிருந்தும் அத்தகைய ஒவ்வொரு பீடத்தினதும் துறைத் தலைவர்களிடையேயிருந்து, அத்தகைய பீடங்களின் ஒவ்வொரு பீடச் சபைச் சபையினாலும் தெரிவு செய்யப்படும் ஒவ்வோர் உறுப்பினர்.

(இ) கல்வி, உயர்தொழில், விஞ்ஞான அல்லது நிர்வாக செயலலகுகளில் சிறப்புச் சேவை ஆற்றியுள்ளோர்களிடையேயிருந்து ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் எட்டு உறுப்பினர்கள் ; ஆயின், அவ்வாறு நியமிக்கப்படுவர்களில் ஆகக் குறைந்தது ஐந்து உறுப்பினர்கள் மருத்துவ உயர் தொழில் துறையைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும்."